சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – விருதுநகர் மாவட்டம் – சாத்தூர் ஊராட்சி ஒன்றிம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) – ஈப்பு எண்.TN 09 G 1247 –ஐ முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்து – ஆணையிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி4) துறை

அரசாணை (ப) எண்.25 நாள்: 18.01.2011
தை – 04,
திருவள்ளுவர் ஆண்டு 2042,
படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.2275/உள்(போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990.
2. தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்பு துறை இயக்குநரது கடித ந.க.எண்.H1/4230/10, நாள் 20.04.2010.
3. விருதுநகர், மாவட்ட ஆட்சியரின் கடித எண்.5678/2008/க்யூ2, நாள் 5.05.2010.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.35585/2010/பரா. 2.5, நாள் 18.05.2010 (ம) 23.11.2010.

------

ஆணை:

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஊராட்சி ஒன்றிம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) – ஈப்பு எண்.TN 09 G 1247 – மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால், முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அந்த ஈப்பினை கழிவு நீக்கம் செய்ய மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் விருதுநகர் மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்டுள்ள கருத்துருவினை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, வாகனம் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், துறைத் தலைவர் மூலமாக அரசிற்கு கருத்துரு அனுப்பி, வாகனம் கழிவு நீக்கம் செய்ய ஆணை பெறப்பட வேண்டும். மேலும் அவ்வரசாணையின்படி ஈப்பு வாங்கப்பட்டு 10 வருடங்கள் அல்லது ஈப்பு 2.5 இலட்சம் கி.மீ ஓடியது இதில் எது பிந்தியதோ, அப்போது வாகனம் கழிவு நீக்கம் செய்ய தகுதியுடையதாகும். இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள ஈப்பு 1998–ஆம் ஆண்டு வாங்கப்பட்டுள்ளது. ஆனால் வாகனம் 2,04,385 கி.மீ. மட்டுமே ஓடியுள்ளது. எனவே 10 ஆண்டுகள் நிபந்தனை மட்டுமே நிறைவு செய்கிறது.

(த.பி.பா)

**3.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரது கருத்துரு அரசினால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. கவனமான பரிசீலினைக்கு பின் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஊராட்சி ஒன்றிம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) – ஈப்பு எண்.TN 09 G 1247 – ஐ முதிரா நிலையில் சிறப்பு இனமாக கருதி கழிவு நீக்கம் செய்து, அரசு ஆணையிடுகிறது.

**4.** இவ்வாணை உள்(போக்குவரத்து) துறையின் அ.சா.கு. எண்.**58886**/போ.**4**/10-1, நாள் **29.07.2010**–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – **15.**
மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டம்.
இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை–**42.**
மாநில கணக்காயர், சென்னை–**18.**
<u>நகல்</u>
உள்(போக்குவரத்து) துறை,
நிதித்துறை.
இருப்பு கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்